## தவறுகளைச் சுட்டுதல் & வாக்கியத்திலுள்ள பிழைகளைத் திருத்துக. வினா-விடை தொகுப்பு

1.மராஸ்மஸ் மற்றும் குவாஷியோர்கர் நோய்கள் புரதக் குறைபாட்டால் ஏற்படுகின்றன. மராஸ்மஸ் நோய், குவாஷியோர்கர் நோயிலிருந்து உப்பிய வயிறு மற்றும் முகத்தில் வீக்கம் ஆகிய அறிகுறிகள் மூலம் வேறுபடுகின்றன. இக்கூற்று சரியா? தவறாக இருப்பின் திருத்தி எழுதுக.

விடை :

* **இக்கூற்று தவறு**

**திருத்திய விடை :**

* **மராசுமஸ் நோய் அறிகுறிகள் : எடை குறைவு, கடுமையான வயிற்றுப் போக்கு.**
* **குவாஷியோர்கர் நோய் அறிகுறிகள் : உப்பிய வயிறு, முகம் கால்களில் வீக்கம்.**

---

2.கீழ்க்காண் வாக்கியங்களைப் படித்து சரியா? தவறா? என்று கூறுக

i) நிறக்குருடு ஒரு மரபியல் நோய் எனில் மாலைக்கண் நோய் சத்துக் குறைபாட்டு நோயாகும்.

ii) பெர்னீசியஸ் அனீமியா ஒரு சத்துக் குறைபாட்டு நோய் எனில் சிக்கிள்செல் அனீமியா ஒரு மரபியல் / குறைபாட்டு நோய்

iii) TT தடுப்பூசி பாதிக்கப்பட்ட குழந்தைக்கு மந்தமாகப் பெறப்பட்ட தடுப்பாற்றல் எனில் BCG தடுப்பூசி செயல்மிகு பெறப்பட்ட நோய் தடுப்பாற்றலை அளிக்கிறது.

iv) மலேரியா ஒரு பாக்டீரிய நோய் எனில் படர்தாமரை ஒரு வைரஸ் நோய்.

விடை :

(i) **சரி**

(ii) **சரி**

(iii) **தவறு. TT மற்றும் BCG ஆகிய இரண்டுமே செயல்மிகு பெறப்பட்ட நோய்த் தடுப்பாற்றலைக் அளிக்கிறது.**

(iv) **தவறு. மலேரியா புரோட்டோசோவா மூலம் பரவும் நோய். படர்தாமரை பூஞ்சை மூலம் பரவும் நோய்.**

---

3.சரியான கூற்றைக் கண்டுபிடிக்க (சரி / தவறு)

அ) காசநோய், மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ் எனும் பாக்டீரியாவால் உருவாகிறது.

ஆ) டைபாய்டு, ட்ரைகோபைட்டான் என்னும் பூஞ்சையால் உருவாகிறது.

இ) மலேரியா, பிளாஸ்மோடியம் வைவாக்சினால் உருவாகிறது.

ஈ) இன்புளூயன்சா, எண்டமீபா ஹிஸ்டாலைடிகா என்னும் புரோட்டோசோவாவினால் உருவாகிறது.

www.Kanchikalvi.com

விடை :

**அ. சரி**

**ஆ. தவறு. டைபாய்டு சால்மோனல்லா டைஃபி என்னும் பாக்டீரியாவால் உருவாகிறது.**

**இ. சரி**

**ஈ. தவறு. இன்புளூயன்சா A $(H_1N_1)$ எனப்படும் வைராஸால் உருவாகிறது.**

---

4.ஒரு மாணவன் மீசல்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தார். அவன் அறிவியல் ஆசிரியர் அவனது வாழ்க்கையில் மீண்டும் இந்நோய் அவனைத் தாக்காது என்று கூறினார். இக் கூற்று சரியா?தவறா? காரணம் கூறுக.

விடை :

**இக்கூற்று சரி.**

**காரணம் : மீசல்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டதால் அந்த மாணவனுக்கு பெறப்பட்ட செயல்மிகு நோய்த் தடுப்பாற்றல் இயற்கையாகவே உண்டாகியிருக்கும்.**

---

5.செயல்களின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் உரிய கூற்றுகளைத் தேர்ந்தெடுக்க.

அ) பிட்யூட்ரி சுரப்பி ஹார்மோன்களையும், நொதிகளையும் சுரக்கிறது

ஆ) தைராய்டு சுரப்பி தைராக்ஸின் மற்றும் இன்சுலினைச் சுரக்கிறது

இ) லீடிக் செல்கள் டெஸ்டோஸ்டிரான் ஹார்மோனை உற்பத்தி செய்கின்றன

ஈ) கணையம் நொதிகளையும், ஹார்மோனையும் சுரக்கின்றது.

விடை :

* **இ மற்றும் ஈ. லீடிக் செல்கள் டெஸ்டோஸ்டிரான் ஹார்மோனை உற்பத்தி செய்கின்றன. மற்றும் கணையம் நொதிகளையும் ஹார்மோன்களையும் உற்பத்தி செய்கின்றன.**

6. கீழுள்ள கூற்றுகள் தவறாக இருப்பின் சரியான கூற்றினை எழுதுக.

அ) ஆல்பா செல்கள் இன்சுலினை உற்பத்தி செய்கின்றன, பீட்டா செல்கள் குளுகோகானை உற்பத்திச் செய;கின்றன.

ஆ) கார்ட்டிசோன் நோய் எதிர்ப்புத் தன்மையைக் குறைக்கின்றது.

இ) தைமஸ் சுரப்பி ஒரு நிணநீர்த் தொகுதி.

ஈ) அண்டகம் முட்டைகளையும், ஆண்ட்ரோஜனையும் உற்பத்தி செய்கிறது.

விடை :

**அ. இது தவறான கூற்று.**

**சரியான கூற்று :ஆல்பா செல்கள் குளுக்கோகானை உற்பத்தி செய்கின்றன. பீட்டா செல்கள் இன்சுலினை உற்பத்தி செய்கின்றன.**

**ஆ.இது சரியான கூற்று.**

**இ. இது சரியான கூற்று.**

**ஈ. இது தவறான கூற்று.**

**சரியான கூற்று : அண்டகம் முட்டைகளையும் ,ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்டிரான் மற்றும் ரிலாக்ஸின் ஆகிய ஹார்மோன்களையும் சுரக்கிறது.**

7. மனிதரில் நாளமில்லாச் சுரப்பி மண்டலம் பற்றிய சில கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் சரியா / தவறா எனக் கூறுக.

அ) நாளமில்லாச் சுரப்பி மண்டலம் வளர்ச்சி, இனப்பெருக்கம், வாழ்வைத் தொடர்ந்துபேணுதல் முதலிய இயற்செயல்களைக் கட்டுப்படுத்தவும், ஒருங்கிணைக்கவும் செய்கிறது.

ஆ) எண்டோகிரைன் சுரப்பிகள் யாவும் நாளமுள்ள சுரப்பிகள்; அவை சுரக்கக்கூடிய வேதிப்பொருள்களுக்கு ஹார்மோன்கள் என்று பெயர்.

இ) கணையம் என்பது இரட்டைச் சுரப்பி.

ஈ) தைமஸ் சுரப்பியின் கோளாறினால் முன்கழுத்துக் கழலை ஏற்படுகிறது.

விடை :

www.Kanchikalvi.com

**அ.சரி**

**ஆ.தவறு. எண்டோகிரைன் சுரப்பிகள் யாவும் நாளமில்லா சுரப்பிகள். அவை சுரக்கக் கூடிய வேதிப்பொருள்களுக்கு ஹார்மோன்கள் என்று பெயர்.**

**இ. சரி**

**ஈ. தவறு. தைராய்டு சுரப்பியின் கோளாறினால் முன்கழுத்து கழலை ஏற்படுகிறது.**

8. கீழே கொடுக்கப்பட்டுள்ள மியாசிஸ் செல் பிரிதல் பற்றிய வாக்கியங்களில் சரி மற்றும் தவறு என குறிப்பிடுக.

அ) இது உடற்செல்களில் நிகழ்கிறது. ஆ) மியாசிஸ் குன்றல் பகுப்பு எனவும் அழைக்கப்படுகிறது.

இ) ஒத்திசைவான குரோமோசோம்கள் இணைவது குறுக்கே கலத்தல் எனப்படுகிறது.

ஈ) மியாசிஸ் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கிறது. அதுவே பரிணாமத்திற்கு மூலப்பொருள்களாக அமைகின்றன.

விடை :

**அ.தவறு. இது இனப்பெருக்க எபிதீலியல் செல்களில் நடைபெறுகிறது.**

**ஆ.சரி**

**இ.தவறு. ஒத்திசைவான குரோமோசோம்கள் இணைவது இணைவுறுதல் எனப்படுகிறது.**

**ஈ.சரி**

9.திரும்பப் பெற இயலாத வளம் என்பது ஓர் இயற்கை வளம். இதனை மனித நுகர்வின் வேகத்தைவிட மிக வேகமாக இயற்கை நிகழ்வினால் மீண்டும் உருவாக்கலாம். மேற்கண்ட கூற்றைப் படித்து, தவறானதா அல்லது சரியானதா என்பதை உறுதி செய்க. தவறாக இருந்தால், சரியான கூற்றினைக் கூறுக.

விடை :

**இக்கூற்று தவறானது.**

**சரியான கூற்று : திரும்பப் பெற இயலாத வளம் என்பது ஓர் இயற்கை வளம். இதனை மனித நுகர்வின் வேகத்தை விட மிக வேகமாக இயற்கை நிகழ்வினால் மீண்டும் உருவாக்க முடியாது.**

10.பின்வரும் கூற்றுகளில் தவறைக் கண்டறிந்து திருத்துக.

அ) S.T.P - ல் ஒரு வாயுவின் மோலார் பருமன் 22.4 செ.மீ $^3$.

ஆ) 2 × ஒப்பு மூலக்கூறு நிறை = ஆவி அடர்த்தி

இ) ஓர் அணு தனித்த நிலையில் காணப்படுவது இல்லை.

ஈ) மூலக்கூறிலுள்ள அணுக்களின் விகிதம் முழுமையானது அல்லது எளிமையானது அல்லது நிர்ணயிக்க இயலாது.

உ) ) $H_2O$ -ஓர் ஒத்த அணு மூலக்கூறு.

விடை :

**அ. STP - ல் ஒரு வாயுவின் மோலார் பருமன் 22.4 *லிட்டர்.***

**ஆ. 2 × ஆவிஅடர்த்தி = ஒப்பு மூலக்கூறு நிறை**

**இ. ஓர் அணு தனித்த நிலையில் காணப்படும்.**

**ஈ. மூலக்கூறிலுள்ள அணுக்களின் விகிதம் முழுமையானது அல்லது எளிமையானது அல்லது நிர்ணயிக்க இயலும்.**

**உ. $H_2O$ - ஓர் வேற்றணு மூலக்கூறு**

11.தவறான கூற்றைச் சரி செய்க:

அ) சோடியம் பென்சோயேட் உணவுப்பொருட்களைப் பதப்படுத்த பயன்படுகிறது.

ஆ) விவசாயத்தில் நைட்ரிக் அமிலம் உரமாக பயன்படுவதில்லை.

இ) கந்தக அமிலம் வேதிப்பொருள்களின் அரசன் என அழைக்கப்படுகிறது.

ஈ) அமிலத்தின் $P^H$ மதிப்பு 7 ஐ விட அதிகமாக இருக்கும்

உ) காற்று அடைக்கப்பட்ட பானங்களில் அசிட்டிக் அமிலம் பயன்படுகிறது.

விடை : **அ) சரியான கூற்று**

**ஆ) தவறான கூற்று விவசாயத்தில் நைட்ரிக் அமிலம் உரமாக பயன்படுகிறது.**

**இ) சரியான கூற்று**

**ஈ) தவறான கூற்று. அமிலத்தில் $P^H$ மதிப்பு 7 ஐ விடக் குறைவு.**

**உ) தவறான கூற்று. காற்று அடைக்கப்பட்ட பானங்களில் கார்பானிக் அமிலம் பயன்படுகிறது.**

www.Kanchikalvi.com

12.உலோகக்கலவைகள் பற்றிய சில கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தவறானவற்றைக் கண்டறிந்து திருத்துக.

அ) இது உலோகங்களின் ஒரு படித்தான கலவை.

ஆ) Zn இரசக்கலவை பற்குழிகளை அடைக்கப் பயன்படுகிறது.

இ) சிலைகள், நாணயங்கள், கோவில் மணிகள் தயாரிக்க டியூரலுமின் பயன்படுகிறது.

ஈ) நன்கு உருக்கப்பட்ட உலோகங்களை அழுத்தத்திற்கு உட்படுத்தி உலோகக்கலவைகள் தயாரிக்கப்படுகின்றன.

உ) பித்தளையில் Zn ஒரு கரைப்பான்.

விடை :

**அ) சரி**

**ஆ) தவறு. Ag - Sn இரசக்கலவை பற்குழிகளை அடைக்கப் பயன்படுகிறது.**

**இ) தவறு . சிலைகள், நாணயங்கள், கோவில் மணிகள் தயாரிக்க வெண்கலம் பயன்படுகிறது.**

**ஈ) சரி**

**உ) தவறு . பித்தளையில் Zn ஒரு கரைபொருள்.**

13.கீழ்க்காணும் கூற்றுகளில் தவறுகள் இருப்பின் திருத்துக.

அ. ஒரு நியூட்டன் விசை என்பது ஒரு கிராம் நிறையுள்ள பொருளில் $1ms^{-2}$ முடுக்கத்தை ஏற்படுத்தும் விசையின் அளவைக் குறிக்கும்.

ஆ. வினையும் எதிர்வினையும் எப்போதும் ஒரே பொருளின்மீது செயல்படும்.

விடை :

**அ. ஒரு நியூட்டன் விசை என்பது ஒரு கிலோகிராம் நிறையுள்ள பொருளில் $1ms^{-2}$ முடுக்கத்தை ஏற்படுத்தும் விசையின் அளவைக் குறிக்கும்.**

**ஆ. வினையும் எதிர்வினையும் எப்போதும் இரு வேறுபட்ட பொருள்களின் மீது செயல்படும்.**

14.பின்வரும் கூற்றுகளில் உள்ள தவறுகளைத் திருத்துக.

அ) சிறந்த ஆற்றல் மூலம் என்பது ஓர் அலகு நிறைக்குக் குறைந்த அளவு வேலை செய்யக் கூடியது.

ஆ) பயன்படுத்தக் கூடிய வடிவில் உள்ள ஆற்றலை மீண்டும், மீண்டும் நாம் பயன்படுத்தலாம்.

விடை :

**அ) சிறந்த ஆற்றல் மூலம் என்பது ஓர் அலகு நிறைக்குக் அதிக அளவு வேலை செய்யக் கூடியது.**

**ஆ) பயன்படுத்தக் கூடிய வடிவில் உள்ள ஆற்றலை மீண்டும், மீண்டும் நாம் பயன்படுத்த முடியாது.**

15.பின்வரும் சொற்றொடரில் பிழைகளிருப்பின் திருத்தவும்.

அ) காந்தப்புலம் எண்மதிப்பு மட்டும் கொண்ட அளவு.


ஆ) சட்ட காந்தத்தின் வெளியே காந்தவிசைக் கோடுகள் காந்தத் தென்முனையில் தொடங்கி வடமுனையில் முடியும்.

விடை :

**அ. காந்தப்புலம் எண்மதிப்பும் திசையும் கொண்ட அளவாகும்.**

**ஆ. சட்ட காந்தத்தின் வெளியே காந்தவிசைக் கோடுகள் காந்த வடமுனையில் தொடங்கி தென்முனையில் முடியும்.**

16.பின்வரும் கதிர் வரைபடம் குழியாடியில் பிம்பம் தோன்றுவதைக் குறிக்கும்.





அ) அதிலுள்ள பிழையைக் கண்டறிந்து, பிழையற்ற கதிர் வரைபடம் வரையவும்

ஆ) உங்கள் திருத்தத்திற்கான விளக்கம் தரவும்.

விடை :


**அ.**




**ஆ. குழியாடியின் குவியத்தின் வழியே செல்லும் படுகதிர், எதிரொளிப்புக்குப் பின் முதன்மை அச்சுக்கு இணையாகச் செல்லும்.**

www.Kanchikalvi.com

17.கீழுள்ள படத்தில் எந்தக் காந்தஊசி காந்தப்புலத்தின் திசையைச் சரியாகக் காட்டுகிறது?




விடை: **a சரியானது.**

18.

அ) மனிதரை பெருமளவில் பாதிக்கும் நோய்க்காரணிகள் மூன்றினைக் கூறுக.

ஆ) AIDS போன்ற வைரஸ் தொற்றுநோய்களுக்கு மருந்து கண்டுபிடிப்பது மற்ற நோய்களை விட மிகவும் கடினமானது. இக் கூற்று சரியா? தவறா? விவாதிக்க

விடை :

**அ.**

| வ.எண் | நோய்க் காரணிகள் | நோய்கள் |
|---|---|---|
| 1 | மைக்கோ பாக்டீரியம் டியூபர்குளோசிஸ் - TB (பாக்டீரியா) | காசநோய் |
| 2 | பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (புரோட்டோசோவா) | மலேரியா |
| 3 | HIV (ரெட்ரோ வைரஸ்) | எய்ட்ஸ் |

**ஆ. இக்கூற்று சரி.**

(i) **இரத்த வெள்ளையணுக்களின் எண்ணிக்கையை குறைத்து நோய் தடுப்பாற்றல் குறையும்.**

(ii) **HIV வைரஸ்க்கு கொடுக்கப்படும் மருந்துகளால் லிம்போசைட்டுகளும் சேர்ந்து அழிக்கப்பட்டு விடும் இதனால் மனிதன் மேலும் பாதிப்படைவான் எனவே வைரஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பது மற்ற நோய்களை விட மிகவும் கடினம்.**

ஆக்கம் : மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர். இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.
மீனா.மேகநாதன் M.Sc.,B.Ed.,M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம். அலைபேசி-9095484620